வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 01.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

படைப்புத் திறன்சார் துறையில் உலக அளவில் இந்தியா முன்னிலையேற்க, இதுவே சரியான தருணம் என்று, வேவ்ஸ் உச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்

நாட்டின் மொத்த ஜிஎஸ்டி வசூல் கடந்த ஏப்ரல் மாதத்தில், இதுவரை இல்லாத உயர் அளவாக, 2.37 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்து உள்ளது.

நிதிக் குற்றங்களுக்கு எதிராக போராடி, நாட்டின் பொருளாதார நேர்மையை உறுதிப்படுத்துவதில் அமலாக்க பிரிவினர் முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய இணை அமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி கூறி உள்ளார்.

புதுச்சேரியில் ஒருங்கிணைந்த பொலிவுரு பேருந்து நிலையத்தை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், நாளை திறந்து வைக்க உள்ளனர்.

மோடி-WAVES

படைப்புத் திறன்சார் தொழில் துறையில் உலக அளவில் இந்தியா முன்னிலையேற்க, இதுவே சரியான தருணம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று மும்பையில் உள்ள ஜியோ சர்வதேச மாநாட்டுக் கூடத்தில், ஊடகம் மற்றும் கேளிக்கை துறைக்கான WAVES மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசிய அவர், இம்மாநாடு அதன் பெயருக்கு ஏற்ப, கலாச்சாரம், படைப்பாக்கம், மற்றும், உலகத் தொடர்புகளுக்கான புதிய அலையாகவே திகழ்வதாக கூறினார். நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, கலைஞர்கள், புதுமைப் படைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை, இம்மாநாடு ஈர்த்து இருப்பதாகவும், மாநாட்டின் ஒரு பகுதியான WAVES பஜார் முன்முயற்சி, கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகளிடையே புதிய கருத்துக்களை தூண்டும் மேடையாகவே அமைந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஸ்டார்ட்-அப் துறையில், உலகின் 3-ஆவது பெரிய நாடாக இந்தியா திகழ்வதையும், உலகின் 3-ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக இந்தியா பயணித்து வருவதையும், முன்னேறிய இந்தியாவை உருவாக்க விக்சித் பாரத் இயக்கம் அமலாகி வருவதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார். பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்............

**(வாய்ஸ்)**

மோடி-WAVES

**(வாய்ஸ்)**

திரைப்படத் தயாரிப்பு, டிஜிட்டல் உள்ளடக்கம், இசை, கேமிங், உள்ளிட்ட துறைகளில் உலக கேந்திரமாக இந்தியா மேம்பட்டு வருவதாகவும், படைப்புத் திறன் சார்ந்த இத்துறையில், இந்தியாவின் வலுவை வேவ்ஸ் மாநாடு உலகிற்கு வெளிப்படுத்தும் என்றும் வேவ்ஸ் மாநாட்டின் தொடக்க விழாவில் பிரதமர் கூறினார். குறிப்பாக நிகழ்நிலை கேளிக்கை துறையின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இந்தியாவில் அதிகம் இருப்பதாக அவர் தெரிவித்தார். உலக அளவிலான அனிமேஷன் சந்தையின் மதிப்பு அடுத்த 10 ஆண்டுகளில் 2 மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இத்துறையின் வாய்ப்புக்களையும் இந்தியா பெரிய அளவில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார் .

100 கோடிக்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட இந்தியாவில் அதைவிட அதிக எண்ணிக்கையில் கதைகள் உண்டு என்றும் பிரதமர் குறிப்பிட்டார். இந்திய திரைப்படங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் வெளியிடப்படுவதாகவும், உலகின் ஒவ்வொரு மூலையிலும் இந்திய திரைப்படங்களுக்கு ரசிகர்கள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

மோடி-WAVES

நாட்டில் ஓடிடி துறையும் பல மடங்கு வளர்ச்சி அடைந்துள்ள நிலையில், இந்தியாவில் படைப்போம்-உலகிற்காக படைப்போம் என்பதற்கு இதுவே சரியான தருணம் என்பதால் இந்திய இளைஞர்கள் இந்தியாவின் கலைகளை உலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் உலக முதலீட்டாளர்கள் இந்திய திறன்கள் மீது அதிக முதலீடு செய்ய வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

ஜிஎஸ்டி

நாட்டின் மொத்த ஜிஎஸ்டி வசூல் கடந்த ஏப்ரல் மாதத்தில், இதுவரை இல்லாத உயர் அளவாக 2.37 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்து உள்ளது. இது கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில், 12.6 சதவிகிதம் அதிகமாகும். மொத்த ஜிஎஸ்டி வசூலில், 10.7 சதவிகிதம், உள்ளூர் பரிவர்த்தனைகள் மூலமான வருவாயாகவும், 20.8 சதவிகிதம், இறக்குமதி சரக்குகள் மூலமான வருவாயாகவும் கிடைத்துள்ளது.

மே தினம்

இன்று சர்வதேச தொழிலாளர் தினம், உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதை ஒட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தொழிலாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். முன்னேறிய இந்தியா என்னும் கனவை நனவாக்குவதில், இரவு-பகல் பாராது பங்களித்து வரும் தொழிலாளர்களே நாட்டின் வலுவான தூண்கள்

என்றும் தொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் சமூக ஊடகப் பதிவில் அவர் கூறி உள்ளார்.

*கேல் ரத்னா*

மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இன்று புதுடெல்லியில், பேட்மிண்டன் சாம்பியன்களான சீராக் ரெட்டி, ராங்கி ரெட்டி ஆகியோருக்கு, 2023-ஆம் ஆண்டுக்கான **மேஜர் தியான்சந்த் கேல் ரத்னா விருது வழங்கி** சிறப்பித்தார். இன்றைய விளையாட்டு வீரர்களின் அர்ப்பணிப்பு, மற்றும், சிறப்பான ஆட்டத்திற்கு சான்றாகவே கேல் ரத்னா விருது அமைந்து இருப்பதாகவும், எதிர்கால முயற்சிகளிலும் இவர்கள் வெற்றி பெற தாம் வாழ்த்துவதாகவும், சமூக ஊடக பதிவு ஒன்றில் அமைச்சர் கூறி உள்ளார்.

*பொது விநியோம்*

நடப்பாண்டுக் கொள்முதல் பருவத்தில் இதுவரை, மொத்தம் 256 லட்சம் டன் கோதுமை, கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக, மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை செயலர் திரு சஞ்சீவ் சோப்ரா தெரிவித்துள்ளார். இவ்வாண்டு இறுதிக்குள் இதை 312 லட்சம் டன்னாக உயர்த்தும் இலக்குடன் அரசு செயல்பட்டு வருவதாக, அவர் இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கோதுமை

விவசாயிகளுக்கு தற்போது ஆன்-லைன் பதிவு உட்பட முழுமையான பல வசதிகள் கிடைப்பதால் கொள்முதல் பணிகள் எளிதாகி இருப்பதாகவும், விவசாயிகளுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை, தற்போது 48 மணி நேரத்திற்குள் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். புதிய சர்க்கரை கட்டுப்பாட்டு உத்தரவின் கீழ், சர்க்கரை ஆலைகளின் தரவுகளும் விரிவான மென்பொருள் வசதி மூலம் சேகரிக்கப்படுவதாக, திரு சஞ்சீவ் சோப்ரா மேலும் தெரிவித்தார்.

*அமலாக்கப் பிரிவு*

பணச் சலவை மோசடிகளால் பாதிக்கப்பட்டவர்களின் 30 ஆயிரம் கோடி ரூபாய் சொத்துக்களை, கடந்த ஆண்டில், பணச் சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் அமலாக்கப் பிரிவினர் மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்து இருப்பதாக மத்திய நிதித் துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார். புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற அமலாக்கப்பிரிவின் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் தகவல்கள் ................

**(வாய்ஸ்)**

*அமலாக்கப் பிரிவு*

**(வாய்ஸ்)**

நிதி மோசடியால் பாதிக்கப்படும் வணிகர்களுக்கு நீதி வழங்க அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், இது தொடர்பாக அமலாக்க பிரிவினர் மேற்கொண்டு வரும் மெச்சத் தக்க முயற்சிகளால் மக்களின் நம்பிக்கை வலுப்பெறும் என்றும் அமைச்சர் கூறினார். சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களாக எண்ணிக் கொள்பவர்களை கட்டுப் படுத்துவதில், அமலாக்கப் பிரிவினர் பல்வேறு நெருக்குதல்களையும் மீறி சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நிதிக் குற்றங்களுக்கு எதிராக போராடி நாட்டின் பொருளாதார நேர்மையை உறுதிப்படுத்துவதில் அமலாக்க பிரிவினர் முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி தெரிவித்தார். தேச எல்லைகளைத் தாண்டியதாக விரிவடைந்து வரும் பொருளாதார குற்றங்களின் தன்மையிலும் சிக்கல் அதிகரித்து வரும் நிலையில் அமலாக்கப் பிரிவினரின் பங்கு பணிகள் கூடுதல் முக்கியத் துவம் பெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

முருகன்

நிகழ்நிலை பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் துறையில் இந்தியாவின் வளர்ச்சியை தூண்டுவதற்கான முக்கிய உத்திகள் என்பது பற்றிய வெள்ளை அறிக்கையை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், மும்பையில் நடைபெற்று வரும் வேவ்ஸ்

உச்சி மாநாட்டில், வரும் சனிக்கிழமை வெளியிடுகிறார். இத்துறையில் உருவாகி வரும் புதிய போக்குகள் மற்றும் வாய்ப்புகள் குறித்த விவரங்களும் அறிக்கையில் இடம் பெறும். நாட்டில் கடந்த 2024-ஆம் ஆண்டில், நிகழ்நிலைப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை, 15 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*பேருந்து நிலையம்*

புதுச்சேரியில் ஸ்மார்ட் நகர திட்டத்தின் கீழ் 29 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த பொலிவுரு பேருந்து நிலையமாக மேம்படுத்தப்பட்டுள்ள, மறைமலை அடிகள் சாலை பேருந்து நிலையத்தை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் நாளை திறந்து வைக்க உள்ளனர். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் இவ்விழாவில் பங்கேற்க உள்ளனர். புதிய பேருந்து நிலையம் திறக்கப்படுவதால், தற்போது ஏஎப்டி மைதானத்தில் இயங்கி வரும் தற்காலிக பேருந்து நிலையம் மூடப்பட்டு, நாளை மறுநாள் 3-ஆம் தேதி முதல், அனைத்து வழித் தடப் பேருந்துகளும், புதிய பேருந்து நிலையத்தில் இருந்தே இயக்கப்படும் என்றும் புதுச்சேரி நகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

*காரைக்கால்-வருகை*

இன்று காரைக்கால் மாவட்டத்திற்கு வருகை புரிந்த, ஆன்மீகத் தலைவரும் வாழும் கலை அமைப்பின் நிறுவனருமான குருதேவ் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரை, மாவட்ட துணை ஆட்சியர் திரு செந்தில்நாதன் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். மாவட்ட செய்தி விளம்பரத் துறை உதவி இயக்குநர் முனைவர் குலசேகரன், மாவட்ட ஆட்சியரின் செயலர் திரு பொன் பாஸ்கரன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் உடன் இருந்தனர். தொடர்ந்து குருதேவ் ரவிசங்கர், திருநள்ளாற்றில் சாமி தரிசனம் செய்தார்.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு ஜெய்ப்பூரில் நடைபெறும் போட்டியில், ராஜஸ்தான்-மும்பை அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு சென்னையில் நடைபெற்ற போட்டியில், பஞ்சாப் அணி, 4 விக்கெட் வித்தியாசத்தில், சென்னை அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*மழை*

நாட்டின் வடகிழக்கு, மத்திய பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய கிழக்கிந்தியப் பகுதிகளில் இவ்வாண்டு கோடை அனல் நாட்களின் எண்ணிக்கை இயல்பை விட அதிகமாக இருக்கும் என இந்திய வானிலை ஆய்வுத் துறை கணித்துள்ளது. தீபகற்ப இந்தியாவின் தென் பகுதிகள், மற்றும், கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளைத் தவிர, நாட்டின்

பெரும்பாலான பகுதிகளில், அதிக பட்ச வெப்பநிலை, இயல்பை விட அதிகமாகவே பதிவாகும் என்றும் வானிலை ஆய்வுத் துறையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மத்திய பகுதிகள், மற்றும், கிழக்கு,வடகிழக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவின் சில பகுதிகளைத் தவிர இதர பகுதிகளில், இம்மாதம் மழைப் பொழிவு, இயல்பாகவோ அல்லது இயல்பை விட அதிகமாகவோ இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*பஹல்காம்-வழக்கு*

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த மூவர் தாக்கல் செய்திருந்த பொது நலன் மனுவை விசாரணைக்கு ஏற்க இன்று உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டதைத் தொடர்ந்து மனுதாரர்கள் தங்களின் மனுவை விலக்கிக் கொண்டனர். முக்கியமான இத்தருணத்தில் பொது நலன் மனு போன்ற நடவடிக்கைகளால் பாதுகாப்பு படையினரின் மன உறுதி பாதிக்கப்படும் என்று நீதிபதிகள் தங்களின் உத்தரவில் கூறினர்.

*சாதி வாரி கணக்கெடுப்பு*

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதான மத்திய அரசின் முடிவு, காலத்தின் தேவை என்று மத்திய அமைச்சர் திரு சீராக் பாஸ்வான் கூறி உள்ளார். பல்வேறு ஜாதியினரின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அரசு

பல்வேறு திட்டங்களை அமல்படுத்துவதால் சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் என்று அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். நலிவடைந்த சாதியினரை சமுதாயத்தின் பிரதான நீரோட்டத்தில் சேர்ப்பதற்கான வாய்ப்புக்களையும் சாதிவாரி கணக்கெடுப்பு வழங்குமென அவர் தெரிவித்தார். எதிர்கட்சிகள், அரசியல் ஆயுதமாகவே சாதிவாரி கணக்கெடுப்பை பயன்படுத்துவதாக திரு பாஸ்வான் குற்றம் சாட்டினார். தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி உள்ளிட்டவர்களும், சாதிவாரி கணக்கெடுப்பு முடிவை வரவேற்றுள்ளனர். சாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்வதில் தெலங்கானா அரசின் அனுபவங்களை மத்திய அரசுடன் பகிர்ந்து கொள்ள தயார் என்றும் திரு ரேவந்த் ரெட்டி கூறி உள்ளார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

படைப்புத் திறன்சார் துறையில் உலக அளவில் இந்தியா முன்னிலையேற்க, இதுவே சரியான தருணம் என்று, வேவ்ஸ் உச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்

நாட்டின் மொத்த ஜிஎஸ்டி வசூல் கடந்த ஏப்ரல் மாதத்தில், இதுவரை இல்லாத உயர் அளவாக, 2.37 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்து உள்ளது.

நிதிக் குற்றங்களுக்கு எதிராக போராடி, நாட்டின் பொருளாதார நேர்மையை உறுதிப்படுத்துவதில் அமலாக்க பிரிவினர் முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய இணை அமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி கூறி உள்ளார்.

புதுச்சேரியில் ஒருங்கிணைந்த பொலிவுரு பேருந்து நிலையத்தை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், நாளை திறந்து வைக்க உள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.